பள்ளிக்குச் செல்வதற்கு சிரமப்படுகிறார்கள். ஆகவே, முக்கியமான இந்தப் பிரச்சினையில் அங்கே வாழ்கின்றவர்களின் நிதி வசதி இல்லாத நிலையை கருத்திற் கொண்டு விரைவிலேயே அங்கே ஓர் உயர்நிலைப் பள்ளி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1974–75-ல் ஒரு உயர் நிலைப் பள்ளி துவங்க வேண்டும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது இயலவில்லை. காரணம், முதலிலே நான் குறிப்பிட்டபடி நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றத்தக்க சூழ்நிலை அங்கே இல்லை என்று அறிகிறேன். அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற சூழ் நிலை இருக்குமானால் பரிசீலிக்கப்படும். திருப்புவனத்திலுள்ள ஒரு உயர் நிலைப் பள்ளியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து பெண்களுக்கு தனித் தனி வகுப்புகள் 11-வது வகுப்பு வரை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசினர் மகளிர் கல்லூரி, திண்டுக்கல்.

*360 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் அரசினர் மகளிர் கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை யில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஓர் உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் தம் அறை யிலேயே அனுமதி மறுத்து அதை எழுப்பிய உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தம் முடிவைத் தெரிவித்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இன்றைக்கு ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் இந்த மன்றத்துக்கு முன்னால் கொண்டுவரப்பட வேண்டுமென்று கொடுத்திருந்தேன், அதற்கு, மாண்புமிகு பேரவைத்